> நம் குடும்பங்கள் மற்றும் இந்த உலகிற்கு மிகவும் உடனடித் தேவை அன்பைப் பரப்புவது. நம்முடைய தியாகம், மரியாதை, திறந்த மனது மற்றும் வேற்றுமைகளைக் கொண்டாடுதல் ஆகியவற்றின் வழியாக இதை உறுதியான வழிகளில் எடுத்துக்காட்ட முடியும்.

இவற்றைப் பற்றி சிந்திக்கும்போது, நம்மிடையே இருக்கும் பிளவுகள் பல்வேறு வகையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஒரு குழந்தை அன்பையும் வெறுப்பையும் தான் கருவில் உருவாகும்போதிலிருந்தே எதிர்கொள்கிறது. அதன்பின்னர் அது குடும்பத்தில் பல்வேறு உறவுகளில் அது வெளிப்படுகிறது. குடும்பம் மற்றும் உலகில் இது எவ்வளவு சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அதற்கு குணமளித்தலும், ஒன்றிப்பும் தேவை. இவை அதிகமாக சமயங்களுக்கிடையிலே நடைபெறும் திருமணத்தில் இது இன்னும் அதிகமாகவும் உடனடியாகவும் தேவைப்படுகிறது.

**நம் குடும்பங்கள் மற்றும் இந்த உலகிற்கு மிகவும் உடனடித் தேவை அன்பைப் பரப்புவது. நம்முடைய தியாகம், மரியாதை, திறந்த மனது மற்றும் வேற்றுமைகளைக் கொண்டாடுதல் ஆகியவற்றின் வழியாக இதை உறுதியான வழிகளில் எடுத்துக்காட்ட முடியும்.** சமயங்களுக்கிடையிலான குடும்பங்களில், நிலவும் வேற்றுமைகள், சவால்களுக்கு மத்தியில் குடும்ப அன்பு வலிமையாக இருந்தால் இதுவே பல குடும்பங்களுக்கு எடுத்துகாட்டாகத் திகழும். சமயங்களுக்கிடையில் வாழும் கத்தோலிக்க குடும்பங்கள் அவர்களின் நற்செய்தி மதிப்பீடுகளுக்கு சாட்சிகளாக விளங்கவும், இயேசு நமக்குக் கற்றுத் தந்த மாபெரும் கட்டளையான, “கடவுளை அன்பு செய்வது, அடுத்திருப்பவருக்கு அன்பு செய்வது“ என்ற கட்டளையை வாழ்ந்து காட்டவும் வேண்டும்.

நம்முடைய பங்குகளில் வாழும் குடும்பங்களில் சமயங்களுக்கிடையே திருமணம் புரிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு, நீங்கள் எவ்வாறு சாட்சிமிக்க வாழ்வு வாழ்கின்றீர்கள் என்ற செய்தியைப் பகிர்ந்துகொள்ள விரும்பினால், அருள்பணி பீட்டர் அந்தோனி அவர்களுக்கு peter@archkl.org என்ற மின்னஞ்சல் மூலம் தெரிவியுங்கள் உங்களுடைய சாட்சியத்தைக் கேட்க ஆவலாக உள்ளோம்.

குடும்பங்களில் ஒருவருக்கொருவர் அன்பைக் காட்டி தரமான நேரத்தைச் செலவிடும் குடும்பங்கள் செழித்து வளரும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தங்களைக் கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி: என் குடும்ப உறுப்பினர்களுடன் உறவுகளைக் கட்டியெழுப்ப, எனக்குத் தடையாக இருப்பது என்ன? இது ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேறுபடும். உணவு நேரத்தின்போது கைப்பேசியை பயன்படுத்தாமல் இருப்பது, பிறருக்கு பேச வாய்ப்பளிப்பது, பிறர் உரையாடும்போது காதுகொடுத்து செவிமடுப்பது, வீட்டிலேயே மகிழ்ச்சியாக நேரத்தைச் செலவிடுவது. குடும்பங்களில் ஒருவருக்கொருவர் நேரத்தைத் தரும்போது, தனிமனிதராகவும் குடும்பமாகவும் தரமான நேரத்தை மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்.

இயேசு கிறிஸ்துவின் பணியைத் தொடர்வது நமது பொறுப்பு. அனைத்து மக்களிடையேயும், சமூகத்திற்குள்ளும், பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் நம்பிக்கைக் கொண்ட மக்களுடனும் நல்லிணக்கத்தையும் மரியாதையையும் உருவாக்குவதன் மூம் திருஅவையை மீண்டும் நிலைநிறுத்தலாம். இந்தப் பணி நம் குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் தொடங்குகிறது. என்னிடமிருந்து தொடங்குகிறது.


*Published by:*
Peninsular Malaysia
Pastoral Team

*Email:* api@archkl.org

**INTERNAL CIRCULATION ONLY**

BUL 08/2023



19 பிப்ரவரி 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH பொதுக்காலம் ஆண்டின் 7 ஆம் ஞாயிறு

மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது

மாதாந்திர கருப்பொருள்: **குடும்பமும் ஒற்றுமையும்**




# உலக சமயங்களுக்கிடையிலான உறவு மற்றும் நல்லிணக்க வாரம்

அன்பே கடவுள். அன்பினால் தான் கடவுள் தம் படைப்பிற்காகவும், தம் மக்களுக்காகவும் தம் உயிரை நமக்கு இலவசமாகக் கையளித்தார். ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும் அன்பே, எல்லாச் சூழ்நிலையிலும் நம்பிக்கையையும் பலவேறுபாடுகள் நிறைந்த உலகில் வாழ்வதற்கான காரணத்தின் நம்பிக்கையை நீட்டிக்கவும், அதன் நோக்கத்தில் இருக்கும் வேர்களையும் உண்மையாக நம்புகிறது.

இன்றைய உலகில் நாடுகளுக்கு மத்தியில், சமயங்கள், இனங்களுக்கு மத்தியில் மட்டுமல்ல, நம் குடும்பங்களிலும் ஒற்றுமையின்மை நிலவுவதை தொடர்ந்து நாம் பார்க்கின்றோம். ஆழமாக